தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1975 மார்ச் 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

திருநெல்வேலி தெற்கு கல்விச் சரக அலுவலகம்.

* 251. வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகங்கள், கோட்டாட்சித் தலைவர் அலுவலகங்கள் உள்ள இடங்களிலேயே அமைய வேண்டும் என்ற விதி முறை ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், திருநெல்வேலி மாவட்டம், தெற்குக் கல்விச்சரக அலுவலகம், சேரன்மாதேவியிலல்லாமல் பாளையங்கோட்டையில் அமைந்திருப்பதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகங்கள், கோட்டாட்சித் தலைவர் அலுவலகங்கள் உள்ள இடங்களிலேயே இருக்கும் போது, திருநெல்வேலி மாவட்ட தெற்குக் கல்விச் சரக அலுவலகம் மட்டும் சேரன்மாதேவியிலல்லாமல் பாளையங்கோட்டையில் அமைந்திருப்பதன் காரணம் என்ன ? அதை உடனடியாக சேரன்மாதேவிக்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படியொரு கட்டாயம் இல்லை. வேறு பல இடங்களிலும் இடம் மாறி இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஓரிடம் அப்படி இருக்கிறது. சேரன்மாதேவிக்கு மாற்றலாமா என்பது குறித்து செயற்குறிப்புக

ளெல்லாம்கூட வந்தன. அங்கிருக்கும் இடங்கள், மற்றவைகளெல்லாம் அதுபற்றி பார்க்கப்பட்டன. ஆனால் நாங்குநேரி பகுதி, மற்ற பகுதிகளில் இருப்பவர்களெல்லாம் பாளையங்கோட்டையில் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். அம்பாசமுத்திரம் தாலுக்காவின் சில பகுதியினர் பாளையங்கோட்டையில் இருப்பது நல்லது என்று கருதுகிறார்கள். இப்படி இருவேறு கருத்துக்கள் இருப்பதன் காரணமாக எந்த முடிவும் எடுக்காமல், இருக்கிற இடத்திலேயே இருந்து வருகிறது.

நாட்டறம்பள்ளி உயர்நிலைப்பள்ளி.

* 252 வினா.—திரு. ஜி. இராமசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாட்டறம்பள்ளி உயர்நிலைப்பள்ளியில் பொறியியல் மற்றும் வணிகவியல் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. வகுப்ப தேறிய மாணவர்கள் பிறகு வேலை கிடைக்காமல் அவதிப் படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதைப் போக்கும் பொருட்டு, உயர்நிலைப் பள்ளிகளிளெல்லாம் பொறியியல், வணிகவியல் போன்ற பாடங்கள் போதிக்கத்தக்க வசதியை ஏற்படுத்தினால், மாணவர்கள் வாழ்வுக்கு வழி ஏற்படுமல்லவா ? அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே "பைஃபர் கேடட் கோர்ஸ்" என்று இருந்தது. விருப்பப்பட்டவர்கள் அதை எடுத்துப் படிக்க வகை செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக இப்பொழுது காம்ப்ரஹன்சிவ் ஸ்கூல் என்று, எந்தெந்த உயர்நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் என்ன தொழில்கள் இருக்கின்றனவோ அவற்றைப்—பள்ளி நேரம் போக மீதி நேரத்தில்—பயன் படுத்தும் ஒரு திட்டம் வகுத்து, சென்ற ஆண்டு 19 உயர்நிலைப் பள்ளிகளில் பரிட்சார்த்தமாகக் கொண்டுவந்திருக்கிறோம். அதை வேறு பல பள்ளிகளுக்கும் விரிவு படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு இருக்கிறது. அந்தந்தப் பள்ளிகளில் அதற்கான வசதிகள், சுற்றுச் சூழ்நிலைகள், இடவசதி ஆகியவற்றை ஆராய்ந்து தக்க வகையில முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொனனப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது சில பள்ளிக்கூடங்களில் இது ஒரு "பார்ட் டைம்" படிப்பாக வைத்திருக்கிறார்கள். இதை முழு நேரப் படிப்பாக வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?